தென் மண்டல மாவட்ட கழகங்களுக்கு உட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறை கூட்டம் சென்னை அன்பகத்தில் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., முன்னிலை வகித்து துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், என்.மணிராஜ், சு.ராதாகிருஷ்ணன், இரா. தாமரைச்செல்வன், பி.ஆர். அருள்மொழி, துணை செயலாளர்கள் ஜெ.பச்சையப்பன், கே.சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், பா.கணேசன், மறைமலை, கவி கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மேலும் இக்கூட்டத்தில் தென் மண்டலத்துக்குட்பட்ட 20 மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

டெல்லி குடியரசு தின விழாவிற்கு

தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி தேர்வு!

புதுடெல்லி, ஜன.7-

டெல்லியில் இம்மாதம் 26ம் தேதி நடைபெறும் குடியரசு தின விழா அணிவகுப்புக்கு தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி தேர்வாகி உள்ளது.

டெல்லியில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 26ம் தேதி நடைபெறும் குடியரசு தினவிழா கொண்டாட்டத்தின்போது, கடமை பாதையில் முப்படைகள் மற்றும் காவல்துறையினரின் பிரம்மாண்ட அணிவகுப்பும் அலங்கார ஊர்திகளும் இடம்பெறும். நாட்டின் கலை, பண்பாடு, பொருளாதாரவளர்ச்சி,முப்படைகளின் ராணுவ வலிமை, தகவல் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம் ஆகியவற்றை பறைசாற்றும் வகையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறும்.

இந்த நிலையில் நடப்பாண்டுக்கான குடியரசு தின விழாவில் பங்கேற்க, தமிழ்நாடு, தெலங்கானா, ஆந்திரா உள்பட 15 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தின் அலங்கார ஊர்திகள் தேர்வாகி உள்ளது. தமிழ்நாட்டின் சார்பில் சோழர்கள் கால குடவோலை முறையை வெளிப்படுத்தும் உத்திரமேரூர் கல்வெட்டு குறித்த விவரக் குறிப்புகளை காட்சிப்படுத்தும் அலங்கார ஊர்தி ஒன்றிய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கலை நயத்துடன் தயாராகிவரும் தமிழக அரசின் அலங்கார ஊர்தி டெல்லி குடியரசு தின விழா அணிவகுப்பில் கம்பீரமாக இடம் பெற உள்ளது. அதற்கான பணிகள் டெல்லியில் உள்ள ராணுவ முகாமில் நடைபெற்று வருகின்றன.

சென்னை தேனாம்பேட்டை மருத்துவ பணிகள் இயக்குநரக வளாகத்தில் (டி.எம்.எஸ்) செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு அமுதகம் உணவகத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (5.1.2024) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலமாக தமிழ்நாடு!

1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயரும் நாள் வெகு தொலைவில் இல்லை!

சென்னை, ஜன. 7-

இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநில மாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இந்த வரிசையில் அடுத்த மணிமகுடமாக, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் நாள் வெகு தொலைவில் இல்லையென 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தலைநகர் சென்னையில் வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.5 லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டை 2030ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், தொழில் துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடு களை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் அதன்பின் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று பல ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்பந்தம் மேற்கொண்டார்.

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

தினகரன்
ஜனவரி 6, 2024 சனிக்கிழமை
இலக்கை எட்டுவோம்

தலைநகர் சென்னையில் வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.5.5 லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார். அதன் அடிப்படையில், தொழில் துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
கடந்த 2 ஆண்டுகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஐக்கிய அரபு நாடுகளுக்கும் அதன்பின் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கும் சென்று பல ஆயிரம் கோடி மதிப்பிலான முதலீடுகளுக்கு ஒப்பந்தம் மேற்கொண்டார். இதன் தொடர்ச்சியாக,

இதன் தொடர்ச்சியாக, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இரண்டு நாட்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை, உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடு களை ஈர்ப்பது மட்டுமல்லாமல், பெருமளவில் வேலை வாய்ப்பு அளித்திடும் தொழில் முதலீடுகளையும் ஈர்த்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதன் பலனாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை 4,15,282 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,97,196 கோடி மதிப்பிலான 241 முதலீடுகள் உறுதிசெய்யப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக நடத்தப்படும் இம்மாநாட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பெறப்பட்ட முதலீடுகளை மிஞ்சும் வகையில் முதலீடுகளை பெற திட்டமிடப்பட்டுள்ளது. சி.ஐ.ஐ. உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்படும் இம்மாநாட்டுக்காக அதிநவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், தைவான் உள்பட உலகின் பல நாடுகளின் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. தொழில்துறை, ஆட்டோமொபைல், எரிசக்தி துறை, தகவல் தொழில்நுட்ப துறை உள்ளிட்ட துறைகளில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. குறிப்பாக, படித்த இளைஞர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பது கண்கூடாக தெரிகிறது. தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன துறையின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது. இத்துறையின் வளர்ச்சிக்கு இம்மாநாடு பெரிதும் உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த 2 ஆண்டுகளில், தொழில் வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சமீபத்தில், நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதி தயார்நிலை குறியீடு தரவரிசைகளின்படி, 80.89 புள்ளிகளுடன் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தை பெற்றுள்ளது. மின்னணுவியல் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அதிக எண்ணிக்கையில் தொழிற் சாலைகள் மற்றும் பணியாளர்களை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், அகில இந்திய அளவில் 2வது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் தொழில் புரிவதற்கு சிறந்த மாநிலங்களில் ஒன்றாகவும் தமிழ்நாடு விளங்கி வருகிறது. இந்த வரிசையில், அடுத்த மணிமகுடமாக, தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான

அனைத்து துணைப் பதிவுத் துறை தலைவர்கள் பணிச் சீராய்வுக் கூட்டம்!

அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன.1-

அ.தி.மு.க.வை விழுங்கு சென்னை, ஜன.7-

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று (06.01.2024) சென்னை நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கத்தில் 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான அனைத்து துணைப் பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டப்பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர் / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் பணிச்சீராய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கிவரும் பதிவுத்துறையில் கடந்த வருடம் டிசம்பர் 2022-ஆம் ஆண்டு அடைந்த வருவாயை விட 2023-ம் ஆண்டு டிசம்பர் முடியவுள்ள காலத்தில் கூடுதலாக ரூ.916/- கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அமைச்சர், அடுக்குமாடிகுடியிருப்புகளுக்கு கூட்டு மதிப்பு (Composite Value) அடிப்படையில் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் வசூலிக்கும் நடைமுறைகள் செயல்படுத்தப்படுவது குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள், கூட்டு மதிப்பு தொடர்பாக 01.12.2023 அன்று வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் அறிவுறுத்தியபடி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், தணிக்கை இழப்பு மற்றும் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட வேண்டிய தொகைகளை தொய்வின்றி வசூலிப்பது, சார்பதிவகங்களில் உரிய காரணங்களின்றி நிலுவையில் வைத்துள்ள ஆவணங்களை விடுவிப்பது, பொது மக்கள் எளிய முறையில் ஆவணப்பதிவு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது ஆகியவை குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டு அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கு எய்தப்பட வேண்டும் என வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச்செயலாளர் திரு மதி.பா.ஜோதி நிர்மலா சாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத் துறை தலைவர்கள், பதிவுத்துறை தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது), மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில்

தருமபுரி ரயில் நிலைய மேம்பாட்டு பணிக்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு!

டாக்டர் செந்தில்குமார் எம்.பி. தகவல்!

தருமபுரி, ஜன. 7 -

தருமபுரி ரயில் நிலையத்தை மேம்படுத்த ஒன்றிய அரசு அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம் 15 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக தருமபுரி மக்களவை உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

(05.01.2024) அன்று தருமபுரி ரயில் நிலையத்தை நேரில் பார்வையிட்ட அவர் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர் "தருமபுரி ரயில் நிலையத்தில் 2004 ஆம் ஆண்டு நடைமேடை அமைக்கப்பட்டது. அதற்குப் பின்பு பெரிய அளவில் நடைமேடை மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது ஒன்றிய அரசு அம்ரித் பாரத் திட்டத்தின் மூலம் தருமபுரி ரயில் நிலைய மேம்பாட்டு பணிகளுக்கு ஒதுக்கி உள்ளது. மக்களவை உறுப்பினர் என்ற முறையில் தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தியதன் அடிப்படையில் இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் நலன் சார்ந்து நாம் முன்வைத்த அத்தனை கோரிக்கைகளையும் மத்திய அரசு ஏற்று கொண்டுள்ளது. இந்தநிலையில்

தருமபுரி ரயில்நிலையத்தில் பயணிகள் நலன் கருதி பல்வேறு மேம்பாட்டு பணிகள் ரூ.15 கோடியில் மேற்கொள்ளப்பட உள்ளது.

அம்ருத் பாரத் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தருமபுரி ரயில் நிலையத்திற்கு அருகில் 400 இருசக்கர வாகனங்கள் மற்றும் 50 கார்கள் நிறுத்தும் அளவிற்கு கான்கிரீட் தளத்துடன் கூடிய வாகன நிறுத்தும் இடம் அமைக்கப்பட உள்ளது. உயர் வகுப்பு பயணிகள் காத்திருப்புக் கூடம், மகளிர் மற்றும் பொதுப்பயணிகள் காத்திருப்புக் கூடம் என மூன்று காத்திருப்பு அறைகள் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு நடைமேடையிலும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் இயந்திரம், நவீன கழிப்பிட வசதிகள், தானியங்கி நகரும் படிக்கட்டுகள்,டிஜிட்டல் அறிவிப்பு பலகைகள் உள்ளிட்ட வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் தருமபுரி ரயில் நிலையத்தில் அமைக்கப்பட உள்ளது. இப்பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகள் காரணமாக தருமபுரி ரயில் நிலையம் புதுப் பொலிவு பெற்று பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்குமார்.

அதிக கனமழையினால் பாதிக்கப்பட்ட தென்மாவட்டங்களில்

தமிழ்நாடு சரக்குகள் - சேவைகள் வரிச் சட்டப் படிவம் தாக்கல்!

ஜனவரி 10 வரை நீட்டிப்பு!

சென்னை, ஜன.7-

கடந்த டிசம்பர் 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் தென்மாவட்டங்களில் பெய்த அதிகனமழையின் கடுமையான பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்கான விரிவான நிவாரண நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, அதிகனமழையால் பாதிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய வருவாய் மாவட்டங்களில் முதன்மை வணிகயிடங்களைக் கொண்டுள்ள வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2017-இன் கீழ் நவம்பர் 2023 மாதத்திற்கான GSTR-3B படிவத்தை தாக்கல் செய்ய வேண்டிய உரிய நாளினை டிசம்பர் 20, 2023-இல் இருந்து ஜனவரி 10, 2024 வரை நீட்டித்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள வருவாய் மாவட்டங்களில் உள்ள வணிகர்கள், நவம்பர் மாதத்திற்கான GSTR-3B படிவத்தினை நீட்டிக்கப்பட்ட ஜனவரி 10, 2024 வரை தாக்கல் செய்வதற்கு தாமதக் கட்டணம் மற்றும் வட்டி செலுத்த வேண்டியதில்லை.

மேலும், அதிகனமழையால் பாதிக்கப்பட்ட சென்னை திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய வருவாய் மாவட்டங்களில் முதன்மை வணிகயிடங்களைக் கொண்டுள்ள வணிகர்கள் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் மற்றும் விதிகள், 2017-இன் கீழ் 2022-23 நிதியாண்டிற்கான படிவம் GSTR-9 மற்றும் படிவம் GSTR-9C ஆகியவற்றினைத் தாக்கல் செய்ய வேண்டிய உரிய நாள் டிசம்பர் 31, 2023-இல் இருந்து ஜனவரி 10, 2024 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் நகராட்சி சார்பில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன் கீழ் வார்டு எண் 10 ற்குட்பட்ட காக்களூர் சாலையில் ரூபாய் 27.50 லட்சத்தில் புதிய சமுதாய சுகாதார வளாகம் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நகர் மன்றத் தலைவர் உதய மலர் பாண்டியன், துணைத் தலைவரும் , நகர செயலாளருமான சி.சு ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் பி. வி. சுரேந்திரஷா, நகராட்சி பொறியாளர் நடராஜன், சுகாதார அலுவலர் கோவிந்தராஜ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் டி .கே.பாபு வி. எஸ். நேதாஜி, என். வேலாயுதம், நகர மன்ற உறுப்பினர்கள் வி. ஜான் ,த ஆயூப்அலி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் என். பாலகிருஷ்ணன், ஜே.சி.பி. கேசவன், பா. ராஜி உள்ளிட்ட கழக தோழர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் நகராட்சி துறை சார்ந்த பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கு: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கழக அயலக அணி மாவட்ட - பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு! ஆர்.எஸ்.பாரதி தலைமை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் ஜனவரி 10 - புதன்கிழமை அன்று மாலை 3.00 மணி அளவில் சென்னை - ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா "சமூக நீதிப் போரில் திராவிட இயக்கம்" எனும் தலைப்பில் உரையாற்றுகிறார்.

கழக அயலக அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பன்னாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஜனவரி 10 - புதன்கிழமை அன்று மாலை 5 மணி அளவில் ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளுக்கு கழக அயலக அணித் தலைவர் டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில்குமார் எம்.பி., வழக்கறிஞர். மனு சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள் சேலம் திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன்.ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல். ராம சாமி, சேகர்.ஜே.மனோகர், குமரி.எ.பாபு வின்பிரெட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எனவே இரண்டு நிகழ்வுகளிலும் கழக அயலக அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எம்.அப்துல்லா எம்.பி.
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

பெரம்பலூர் மாவட்டம் கூடலூர் கிராம

கழக முன்னோடி ஆ.தங்கராசு மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

பெரம்பலூர், ஜன.7

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கூடலூர் கிராம மூத்த கழக முன்னோடி, அந்த கிளைக் கழகத்தின் முதல் கிளைச் செயலாளர் ஆ.தங்கராசு (வயது 82) சில நாள் உடல்நலிவுற்று நேற்று முன் தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து கழக நிர்வாகிகள் விரைந்து வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஆ.தங்கராசுவிற்கு மனைவியும் ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். முன்னாள் அமைச்சரின் உதவியாளர் ஆ.அண்ணாதுரை, கருணாநிதி என்கிற இரு சகோதரர்களும் உள்ளனர்.

நேற்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்திலும் ஏராளமான கழக முன்னணியினர் பங்கேற்றனர்.